நாள்.06.02.2024

**அசல் வழக்கு எண். 109/2018**

வா.சா.1 – 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

ராமசாமித் தேவர், மாணிக்கத்தேவர் , நாராயண சாமி தேவர் ஆகியோர்களின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமித் தேவர், மாணிக்கத்தேவர் , நாராயண சாமி தேவர் ஆகியோர்களுக்கு தாவா சொத்தைத் தவிர வேறு சொத்துகள் உண்டா என்றால் எனக்கு தெரிந்த வரை இல்லை. ராமசாமித் தேவர், மாணிக்கத்தேவர் , நாராயண சாமி தேவர் ஆகியோர்கள் அவர்களின் குடும்ப சொத்துகளை எப்பொழுது, எப்படி பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி தேவர் என்பவரின் மனைவி பெயர் தெரியாது. ராமசாமி தேவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பேர். ஒரு பெண், ஒரு ஆண். என் தந்தை பெயர் ராமசாமி. அப்பாவின் அப்பா பெயர் மாரியப்பத்தேவர். நான் யாருடைய வாரிசுதாரர் என்றால் மாணிக்கத்தேவர் மகள் அம்மாக்கண்ணுவின் மகன். அம்மாக்கண்ணுவின் கணவர் பெயர் ராமசாமித் தேவர். அவருடைய மகன் தான் நான். மாணிக்கத்தேவர் அண்ணன் ராமசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 வாரிசுகள். ஒரு ஆண். ஒரு பெண். அவர்களின் பெயர்கள் பக்கிரிச்சாமி தேவர், சீரங்கம் என்ற ஒரு மகள். மாணிக்கத் தேவருக்கு ருக்மணி, அம்மாக்கண்ணு, பாப்பா, ஜெயலட்சுமி ஆகியோர்கள் வாரிசுகள். நாராயண சாமி தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் கோவிந்தசாமி என்ற ஒரே வாரிசு தான். ராமசாமித் தேவர், மாணிக்கத்தேவர் , நாராயண சாமி தேவர் ஆகியோர்களுக்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றும், யார் யாருக்கு எவ்வளவு பாகம் பிரிக்கப்பட்டதென்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**1-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*

*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.